# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 351 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 19 திங்கட்கிழமை (05.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## பாடசாலைகள், பல்கலைகள் ஊடாக ஐஸ் போதைப் பாவனை அதிகரிப்பு

### புலனாய்வு அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

பாடசாலை மற்றும் பல கலைக்கழகங்கள் ஊடாக ஐஸ் போதைப்பொருள் பாவனை தீவிரமாக பரவி வருவதாக புலனாய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த புலனாய்வு அறிக்கை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தரம் 8 முதல் உயர்தரம் வரையிலான மாணவர்கள் மத்தியில் ஐஸ் போதைப் பொருள் பாவனை தீவிரமாக அதிகரித்து வருவதாகவும் தனியார் ▷11

## நாட்டை மீட்கும் பலம் எம்மிடமே உள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பிரச்சினைகளால் சோர்ந்து போயிருக்கும் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளாது பிரச்சினைகளுக்கு தீர்வு ▷11

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மெனிக்பாம் பகுதியில் உள்ள புகையிரதக் கடவையினை கடக்க முயன்ற குடும்பஸ்தர் புகையிரதத்தில் மோதுண்டு நேற்று மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம் பகுதியில் உள்ள தனது வீட்டிலிருந்து விவசாயக் காணியினை பார்வையிடுவதற்காக மெனிக்பாம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது குறித்த ▷11

# அரச காணிகள் வழங்கல் தொடர்பில் புதிய சட்டம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச காணிகள் எதற்காக ஏனையோருக்கு வழங்கப்படுகிறது என்பது எமக்குத் தெரியாது. ஒவ்வொரு நிறுவனங்களும் அவற்றின் விருப்பத்துக்கு ஏற்ப காணிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இதனை நிறுத்தி புதிய சட்டமூலமொன்றை அறிமுகப்படுத்தி அதனூடாக உருவாக்கப்படும் திணைக்களத்தின் ஊடாக காணி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(12ம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் வாள்களுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் கிழக்குப் பகுதியில் நேற்று இரண்டு வாள்களுடன் 38 வயதுடைய, இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

கோப்பாய் 51ஆவது படைப்பிரிவின் இராணுவப் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து, இராணுவப் புலனாய்வு பிரிவினர் மற்றும் சுன்னாகம் ▷11

## மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க தமிழ் எம்.பிக்கள் முன்வாருங்கள்

### மீனவ அமைப்புகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் எம்.பிக்கள் உடனடியாக கிராஞ்சி மீனவர்களின் பிரச்சினையில் தலையிட வேண்டும் என வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் மதியழகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிராஞ்சியில் அட்டைப் பண்ணை பிரச்சினை இப்போது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

மீனவர்களுக்கு எங்கு பிரச்சினை நடந்தாலும் ஒரு சமூகமாக நாம் ▷11

## நாட்டு மக்களுக்கு உண்மையை கூறுங்கள்

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

கிராமத்திற்குச் சென்று கிராமப் பொறிமுறையை பலப்படுத்துமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளும் கட்சியின் அமைச்சர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன ஏற்பாடு செய்திருந்த சந்திப் ▷11

## மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவியரீதியில் உள்ள அரச பாடசாலைகளில் 2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது.

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கை இன்று முதல் மார்ச் 24 வரை நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித் ▷11

### கிளிநொச்சியில்

## சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் இடையே முரண்பாடு

### மூவர் மருத்துவமனையில், ஒருவர் கைது

(தருமபுரம்)

சிவில் உடையில் வந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வனஜீவராசிகள் உத்தியோகத்தர்கள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த இளைஞர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை உத்தியோகத்தர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

இந்த விடயம் ▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

- இந்தியனின் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
- KDh 200 PD-xxxx E 2007 விற்பனைக்குண்டு.
- Euro power 8 KVA ஜெனரேட்டர் ஊர்தியுடன் விற்பனைக்குண்டு.

(13669)

**077 773 0567**



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**
**076 097 3127**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 07 . 1968

மறைவு 17 . 11 . 2021

### அமரர் முத்துராசா இரவீந்திரன்

(முன்னாள் அதிபர் - கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் - தேசியப் பாடசாலை )

**திதி : 05.12.2022**


கண்ணீரில் காலங்கள் கரைந்து
ஆண்டு ஒன்றானது...
உங்கள் நினைவுகளும்;
நீங்கள் காட்டிய பாதைகளும்...
நிதர்சனமாய் எங்களுடன்
தொடர்கிறது கலையாமல்...

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

(C-5422)

ஐயா, அம்மா, மனைவி,
பிள்ளைகள், சகோதரி, சகோதரன்,
மருமக்கள், மைத்துனர் மற்றும் உறவுகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 04 . 1950

மறைவு 05 . 12 . 2021

### அமரர் செல்லையா இராசலிங்கம்

உங்கள் இதயம் இந்த உலகில்
இல்லாவிட்டாலும் உங்கள் நினைவில்தான்
எங்கள் இதயமே துடிக்கிறது அப்பா....

(13674)

நெல்லியோடை
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

உங்கள் நினைவுகளுடன் என்றும் ...
குடும்பத்தினர்



# மணிவிழா வாழ்த்து

## திருமதி நந்தகுமாரி சிவசுப்பிரமணியம் அவர்கள்



### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

29.11.1989 தொடக்கம் இன்று வரை 33 வருடங்கள் ஆசிரிய சேவையில் இணைந்து விஞ்ஞான பாட கல்வியறிவினையும், சுகா தாரமும் உடற்கல்வியும், இணைப் பாடவிதான செயற்பாடாகிய விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்ட வெற்றிகளைப்பெற்றுக் கொடுப்பதில் சிறப்பாக கடமை யாற்றி இன்றைய தினம் அகவை அறுபதை (05.12.2022) பூர்த்தி செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் திருமதி **நந்தகுமாரி சிவசுப்பிரமணியம்** அவர்களின் ஓய்வுக்காலம் இனிதே சிறப்புடன் அமைய வேண்டுமென இறை வனது திருவருள் கிடைக்கப் பிரார்த் திக்கின்றேன்.

ஆசிரியத் தொழிலில் மனப்பூர்வ மாக அர்ப்பணிப்புடன்கடமையாற்றி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பாடுபாட்டு உழைத்த தங்களின் ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் சிறப்பாக அமைய வழிவகுக்கும்.

**வலயக்கல்விப் பணிப்பாளர்**
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



### திருமதி நந்தகுமாரி சிவசுப்பிரமணியம்

- யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை
  **29.11.1983 - 01.02.1993**
- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  **02.02.1993 - 31.12.1994**
- யா/செங்குந்த இந்துக் கல்லூரி
  **01.01.1995 - 18.06.1999**
- யா/இந்து மகளிர் கல்லூரி
  **19.06.1999 - 20.01.2014**
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
  **21.01.2014 - 04.12.2022**

(C-5421)

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரித் தாயின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் காலத்துக்குக் காலம் ஆசிரியர்கள் உன்னத பங்காற்றி வருவது கண்கூடு.

இதற்கமைய திருமதி நந்தகுமாரி சிவசுப்பிரமணியம் அவர்களும் தமது துறையில் பெரும் பணியாற்றியுள்ளார். இணைப்பாட விதானத் துள் ஒன்றான விளையாட்டுத் துறையில் முன்னின்று உழைத்தவர் உள்ளக, வெளிப்புற நிகழ்வுகளில் மாணவர் வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க ஆலோசனைகளை வழங்கியவர். கல்லூரியின் பரீட்சை அலகில் இணைந்து பரீட்சைகள் செம்மையுற நடைபெற பணியாற்றியவர்.

பரிசளிப்பு விழா, இணைப்பாட விதான செயற்பாட்டில் தேசிய மட்ட அடைவினைப் பெற்றுத் தந்தவர்களில் பக்கபலமாக இருந்து செய லாற்றியவர்.

தனது அறுபதாவது அகவையிலும் சுறுசுறுப்பாக செயற்படும் இவர், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் அருளாசியுடன் இன்புற வாழ வாழ்த்துகின்றேன்.

**ம.ஞானசம்பந்தன்**
**அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

### அகவை 60இல் வாழ்த்து

கல்வியங்காடு என்னும் ஊரில் உதித்து அகவை 60ஐ பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் திருமதி நந்தகுமாரி சிவசுப்பிரமணியம் அவர்கள் பாடசாலையில் பலகளங்கள் கண்டு சாதனைகள் புரிந்து அதாவது நியமனப் பாடத்தில் இருந்து விலகி உடற்கல்வியும் சுகாதார மும் பாட இணைப்பாளராகச் செயற்பட்டுள்ளார். இணைப்பாடவிதான செயற்பாடாகிய விளையாட்டுப் போட்டிகளில், தேசிய மட்டப் போட்டிகளில் வீரநடை போடும் அழகே தனியழகு. காண்போரை வசீகரிக்கும் பேச்சாற்றலும்

*சுகம் பெற நலம் பெற நல்பாடம்*
*அகம் நிறை அன்புடன் நல்கினையே*
*ஏகமாய் நின்றாய் பாகமும் ஆனாய்*
*விளையாட்டு அலகில் பல பணி நினதே*
*மணிவிழா காணும் பூவையோ!*
*அமைதியும் அன்பும் நிறையட்டும்*

ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்திய கல்லூரியில் 50 இலட்சங்கள் பெறுமதியான 25, க.பொ.த.(உ/த)-2024 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

## Rupees 50 Lakhs Valued Scholarship for 25 Students of A/L-2024 at JCC

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம் மற்றும் யாழ். மத்திய கல்லூரி 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் அமைப்பு இணைந்து வழங்கும் 50 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான புலமைப்பரிசில் திட்டம்.

**விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்கள்**

**வகை1: யாழ்.மத்திய கல்லூரி அல்லாத வேறு பாடசாலை மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கற்கைநெறிக்கு தம்மை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 10 (பத்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்கம்-ஐக்கிய இராச்சியம் (JCC OBA-UK)

**வகை 2: யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று தொடர்ந்தும் இக் கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கல்வியை கற்க விரும்பும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 15 (பதினைந்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் (JCC- A/L 1987 Batch)

மேற்படி கல்வித்தகைமையுடன் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மொத்த புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை -25**

**புலமைப்பரிசில்களின் பெறுமதி**

தலா ஒரு மாணவனுக்கு 2 இலட்சம் ரூபாய்கள் வீதம் 25 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய்கள் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**புலமைப்பரிசில் வழங்கப்படும் முறை**

மாதந்தோறும் ரூ.7000.00 ப்படி 28 மாதங்களுக்கு வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு தவணைப்பரீட்சை பெறுபேறுகளை இறுதி பரீட்சை வரை ஒழுங்காக எமக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒரு தடவை மாத்திரம் ரூ.4000.00 வழங்கப்படும்.

**புலமைப்பரிசிலின் நோக்கம்**

க.பொ.த.(உ/த) - 2024 பரீட்சையில் 3A விசேட சித்திகளை பெறுதல்.

**யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த (சா/த)-2022 இல் கல்வி பயிலும் 30 மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு தலா 3000 /- படி JCC OBA-UK இனால் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது.**

**மேலதிக விபரங்களுக்கு:** திரு.ம.வித்தியானந்தநேசன் President JCC OBA 0777642379
திரு. மு.இராஜவரோதயம் Secretary JCC OBA 0776057836
திரு.அ.கபில்நேசன் Treasurer JCC OBA 0778469025
E-mail address:JccScholarship@gmail.com

"Central's Flag must never be lowered"

(C-5413)

**யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்- 2022**

# மின்வெட்டின் நேரம் அதிகரிக்கப்படும் அபாயம்

## மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் மின்வெட்டின் நேரத்தை அதிகரிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.**

புதிய எரிபொருள் விநியோகிக்கப்படாமையால் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

4000 மெற்றிக்தொன் எரிபொருள் மூலம் 165 மெகாவோட் மின்சாரம் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்நிலையில் உரிய நேரத்தில் புதிய எரிபொருள் கிடைக்கவில்லை எனில் மின்வெட்டை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றும் நிலைமையை பரிசீலித்து மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டுமா என ஆராயப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# பண்டிகைக்காலத்தில் 80 ரூபாவாக அதிகரிக்கும் முட்டை விலை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை 80 ரூபாவாக அதிகரிக்கலாம் என அரச கால்நடை மருத்துவர் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

முட்டை நுகர்வு குறைந்துள்ளதால் தற்போது முட்டையின் விலை 50 - 60 ரூபாய் வரையில் இருப்பதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை நுகர்வு அதிகரிக்கும் நிலையில் இந்த விலை உயரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முட்டை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் கால்நடை தீவனத்தின் விலை உயர்வு மற்றும் உணவுப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு காண வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து குறைபாடு என பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. வெறும் கலந்துரையாடல்களை மட்டும் நடத்தி தீர்வு காண முடியாது.

நமது உணவில் விலங்கு புரதம் இருப்பது அவசியம். குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மட்டுமின்றி நம் அனைவருக்கும் பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றில் இருந்து புரதம், விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# அரிசி இறக்குமதி உடனடியாக நிறுத்தம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரிசி இறக்குமதி உடனடியாக நிறுத்தப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, பெரும்போகத்தில் சுமார் 7 இலட்சம் ஹெக்டேயரில் நெல் பயிரிடப்பட்டுள்ளதாக பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இது மொத்த பயிரிடல் நிலப் பரப்பில் 75 வீதம் என்றும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# அரியவகை புலி இனம் திருமலையில் பிடிபட்டது



(திருமலை)

மீன்பிடி பூனை (அரிய வகை புலி) இனம் திருகோணமலை மூதூர் 64 ஆம் கட்டை ஜபல் நகர் பகுதியில் பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நீண்டகாலமாக வீடுகளில் உள்ள வளர்ப்பு பிராணிகளை வேட்டையாட வந்த நிலையில் பொதுமக்களினால் கடந்த வெள்ளிக்கிழமை பிடிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட மீன்பிடி பூனை பொதுமக்களினால் வன ஜீவராசிகள் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மீன்பிடிப் பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன் இது தென் மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



## திருமதி யோகராணி கமலநாதன்

(பயிற்றப்பட்ட கணிதம் SLTS -I )

**சேவை விபரம்**

ஆசிரியர் - யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி
1990.03.23 - 2014.01.13
ஆசிரியர் - யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
2014.01.14 - 2017.10.15
உப அதிபர் - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
2017.10.17 - 2022.12.05

திருமதி **யோகராணி கமலநாதன்** அவர்கள் 32 வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி 2022.12.05 இன்று தம் சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளையில் எம் மாணவர்களுக்கு கணிதப்பாடத்தினை திறம்பட கற்பித்து பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவியமைக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கும் அதேவேளை அவரது ஓய்வுக்காலம் நலமும் வளமும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

(C-5417)

# சேவைநலன் பாராட்டு



## திருமதி சுலோஜனா அருந்தவராசா

(பயிற்றப்பட்ட வர்த்தகம் SLTS -I )

**சேவை விபரம்**

யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் - 1988.08.17 - 1993.01.31
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 1993.02.01 - 1994.12.31
யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் - 1995.01.01 - 1996.05.12
மு/ யோகபுரம் மகாவித்தியாலயம் - 1996.05.13 - 1998.07.05
கிளி/ பூநகரி மகா வித்தியாலயம் - 1998.07.06 - 2002.07.31
யா/ உடுவில் முருகமூர்த்தி - 2003.01.01 - 2014.01.19
யா/ நவாலி மகாவித்தியாலயம் - 2014.01.20 - 2014.03.12
யா/ உடுவில் முருகமூர்த்தி - 2014.03.13 }
யா/ உடுவில் மானஸ் மகாவித்தியாலயம் } இன்றுவரை

திருமதி **சுலோஜனா அருந்தவராசா** அவர்கள் முப்பத்துநான்கு வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி இன்று தம் சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளையில் எம் மாணவர்களுக்கு வணிகப்பாடத்தினை திறம்பட கற்பித்தும் நூலகப் பணியாற்றியும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து உதவியமைக்குமாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கும் அதேவேளை அவரது ஓய்வுக்காலம் நலமும் வளமும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

(C-5417)

# மரண அறிவித்தல்

## திருமதி சுகந்தினி சிவானந்தராசா

(ஆசிரியர் - வற்றாப்பளை மகா வித்தியாலயம்)



தண்ணீருற்று மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தராசா சுகந்தினி (ஆசிரியர் - வற்றாப்பளை மகா வித்தியாலயம்) அவர்கள் நேற்று (04.12.2022) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகராசா (ஆசிரியர்) - சிவநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவானந்தராசாவின் பாசமிகு மனைவியும் தர்சினி (நிர்வாக உத்தியோகத்தர் - மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு), தயாளினி (ஆசிரியர் - யாழ். சண்மார்க்க மகா வித்தியாலயம்), சுகந்தன் (ஆசிரியர் - வின்சன்ற் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு), துஷ்யந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரிராசா (எழிலி நகைமாடம், முல்லைத்தீவு), ரகுநாதன், சுஜிதா (ஆசிரியர் - மட்டக்களப்பு), இந்திரகுமார் (வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்), சண்முகராசா (ஓய்வுநிலை ஆசிரியர்), குகானந்தராசா (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் - பளை), காலஞ்சென்ற முருகானந்தராசா, கமலேஸ்வரி, மனோன்மணி (ஓய்வுநிலை தொலைத்தொடர்பு திணைக்கள உத்தியோகத்தர்), ராஜேஷ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதாப், பகலினி, மிதுர்ஷிகா ஆகியோரின் பாசமிகு சித்தியும் தக்ஷி, பவிஷ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பூரபுல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தண்ணீருற்று மேற்கு,**
**முள்ளியவளை.**

(13681)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை கதிர்காமசேகரம்



**தோற்றம்** 19.01.1953 **மறைவு** 02.12.2022

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கதிர்காமசேகரம் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (02.12.2022) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் சின்னையா - இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், மனோஜா, இந்துஜா (லண்டன்), கோகிலா (ஆசிரியர், யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), பிரவீணா (ஆசிரியர், கதிரொளி முன்பள்ளி), ஜெயதீபன் (கொலண்ட்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணச்செல்வன் (சுவிஸ்), ஜெயகரன் (லண்டன்), சந்திரகாசன் (ஆசிரியர், அச்சுவேலி ஆரம்ப பாடசாலை), கஸ்தூரி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நபில்ஷா, ஜெருஸ், ஆருஸ் (லண்டன்), ருஜாந்த், சமீரா, றியாஸ், ஜாஸ்னி (கொலண்ட்), ஆகியோரின் அன்புப் பேரனும், யோகமலர் (அச்சுவேலி), மதிவதனா (கனடா), சூரியகுமார் (இருபாலை), செல்வமோகனா (கொலண்ட்), கிருஸ்ணகுமார் (நோர்வே), சுதாகினி (பிரான்ஸ்), செல்வகுமார் (கனடா), கிரிசாந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தர்மராசா, குணராசா, பாக்கியம், சந்திராதேவி மற்றும் தங்கராசா, நகுலேஸ்வரி, காந்தரூபன், சுவந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5423)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி கரணவாய் ஸ்ரீ அபய சீரடி சாயி ஆலயம்



## லட்ச தீப வேள்வி 07.12.2022 புதன்கிழமை

## நேரம்-காலை 8 மணி முதல் மாலை 7 மணிவரை

கார்த்திகை தீபத் திருநாளில் ஆரம்பித்து
லட்சதீப வேள்வி நடைபெறும் மேற்படி வேள்வியில்
சாயி பக்தர்கள் கலந்து சிறப்பித்து
அருள் பெறுமாறு வேண்டுகிறோம்




கார்த்திகை மகாதீபம் 06.12.2022

ஆலய நிர்வாகம்
077 389 1421
பஸ் பாதை - 750
பருத்தித்துறை தரிப்பிடம், மூத்த விநாயகர் கோவிலடி, கரவெட்டி.

(சி-5412)



## சொர்க்கம் திருமண சேவை

I 1976 கனடாவில் வசிக்கும் Divorce ஆணிற்கு உள்நாட்டில் பெண் தேவை.

II 1991 இலங்கையில் வசிக்கும் ஆணிற்கு மணமகள் தேவை.

III 1995 கனடாவில் வசிக்கும் சூரியச் செவ்வாய் ஆணிற்கு உள் நாட்டில் மணமகள் தேவை.

IV 1994 கனடாவில் வசிக்கும் பெண்ணிற்கு உள்நாட்டில் படித்த ஆண் தேவை.

தொடர்பு கொள்ள :- 001 416 666 1855
077 887 6969

(13672)


# தீவிரமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல்
## 60-70 குழந்தைகள் தினமும் மருத்துவமனையில்



(கொழும்பு)

வைரஸ் காய்ச்சலால் தினமும் 60 முதல் 70 குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அவர்களில் டெங்கு நோயாளர்களும் உள்ளடங்குவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நிபுணர் மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

வைரஸ் காய்ச்சல், டெங்கு, கொரோனா ஆகிய மூன்று நோய்களும் தற்போது சமூகத்தில் பரவி வருவதால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

05.12.2022
கார்த்திகை 19, திங்கட்கிழமை
துவாதசி முற்பகல் 07.48 மணிவரை

அச்சுவினி முற்பகல் 09.21 மணிவரை
சுபநேரம் -12.16-01.46 மணிவரை
இராகுகாலம் - 07.46-09.16 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-அத்தம்

வளவன்




எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.




சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற சிவனை வழிபட வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.




எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், மற்றவர்கள் பாராட்டும் வகையில் காரியங்களைச் செய்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு




சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி உற்சாகம் குறையலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம்.




சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள்,செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு பெருமை சேர்க்கும், போசன சுகமுண்டு.




செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,வாக்கு மேன்மையுண்டு.

அதிர்ஷ்டமில்லையேல் திறமையும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னி கோப் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் இலங்கைக் கான அலுவலகம் நேற்று ஞாயிறு காலை 9.30 மணியளவில் கலட்டி, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவன செயலாளர் மருத்துவ கலாநிதி. மாலதி வரன் பிரதம விருந்தினராக பங்கேற்றார். (படம்-கஜிந்தன்)

# வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து வாள்வெட்டு நடத்திய கும்பல்

## உரிமையாளர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் நடத்திய தாக்குதலில் வர்த்தக நிலைய உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மின்வெட்டு அமுலில் இருந்த நிலையில் 2 மோட்டார்ச்சைக்கிளில் வந்த வாள்வெட்டு கும்பல் வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து வாள் வெட்டு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 35 வயதான வர்த்தக நிலைய உரிமையாளர் அச்சுவேலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (நி-33)

## பாலஸ்தான வைபவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணீரூற்று ஊற்றங்கரை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பாலஸ்தான வைபவம் எதிர்வரும் (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பித்து காலை 8 மணி முதல் 10 மணிவரையுள்ள சுபநேரத்தில் பாலஸ்தான வைபவம் இடம்பெறவுள்ளது. (நி)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாவை மத்தி சனசமூக நிலையத்தில் மாவைக் கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.நாகேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி)

# 'தூய அழகிய மாநகரம்' நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



(அராலி)

யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனின் தூய அழகிய மாநகரம் எனும் துரித அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட பண்ணை சுற்று வட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

ரில்கோ ஹோட்டல் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் குறித்த வேலைத் திட்டம் நடைபெற்று வருகின்றது.

குறித்த திட்டம் நிறைவடைந்ததும் எவ்வாறு சுற்றுவட்டம் அமையவிருக்கின்றது என்பதை காண்பிக்கும் படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. (நி-104)



இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 26 ஆம் திகதி கொழும்பு விகார மாதேவி பூங்காவில் இடம்பெற்ற முதலாவது தேசிய கிடோரி நிகழ்வில் மழலைச் சாரணர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வில் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம், மகாஜனக் கல்லூரி, பன்னாலை கனகசபை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மழலைச் சாரணர்கள், சாரண ஆசிரியர்கள், சாரணர் சங்க மாவட்ட ஆணையாளர் உள்ளிட்டோர் பங்குபற்றியிருந்தனர். (படம்- சுபேசன்)

# 'வடைக்குள் கரப்பான்'

## உணவகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பிரபல உணவகம் ஒன்றில் விற்கப்பட்ட வடையில் கரப்பான்பூச்சி காணப்பட்டமையினால் குறித்த உணவகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.நகரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் காலை உழுந்து வடை ஒன்றினை வாங்கி வீடு சென்று வடையை சாப்பிட்ட போது வடைக்குள் கரப்பான் பூச்சி இருப்பது அவதானிக்கப்பட்டது.

குறித்த நபர் உடனடியாக யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பரிசோதர்களுக்கு அறிவித்ததன் அடிப்படையில்



யாழ்.மாநகர சபையின் சுகாதார பரிசோதர்கள் குறித்த கடைக்கு விஜயம் மேற்கொண்டு குறித்த கடையினை பரிசோதித்ததோடு கடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தனர். (நி-33-104)




யா/நெல்லியடி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா 2019 மற்றும் 2020 நேற்று முன்தினம் கல்லூரி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. (படம்- மகாலிங்கம்)

## திருக்கார்த்திகை தீபத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருக்கார்த்திகை விழாவை முன்னிட்டு கரணவாயில் அமைந்துள்ள அபய ஷீரடி சாய் பாபா கோவிலில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை ஒரு இலட்சம் விளக்குகள் ஏற்றப்படவுள்ளன. (நி)



யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் கீழ் வங்கியலும், நிதியும் டிப்ளோமா மற்றும் தொழில் சார் ஆங்கில டிப்ளோமா ஆகிய இரு கற்கை நெறிகளினதும் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்த அறிமுக நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தார். (படம்-கஜிந்தன்)

# பயன்பாடற்ற நிலையில் காணப்படும் பழைய விடுதிகளை இடித்தழிக்க கோரிக்கை

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் வலியுறுத்து

(சாவகச்சேரி)

உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராமங்களில் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற சாவகச்சேரி நகரசபையின் பழைய விடுதிகளை இடித்தழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் [illegible] காணப்படுகின்ற நகரசபையின் பழைய விடுதிகளால் உதய சூரியன் மற்றும் மகிழங்கேணி கிராம மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

குறித்த கட்டடங்களில் சமூக சீர்கேடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் வேறு பிரதேசத்தைச் சேர்ந்த நபர்கள் சிலர் நகர சபையின் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்கள் எனக் கூறிக்கொண்டு அப்பகுதியில் போதைவஸ்துப் பாவனையில் ஈடுபட்டு வருவதாக நகரசபை உறுப்பினர்களுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே நகரசபை இவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டு உடனடியாக பயன்பாடற்ற விடுதிக் கட்டடங்களை இடித்தழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த விடுதிகளை இடிப்பதற்கு நகரசபையில் ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள போதிலும் நகரசபை இன்று வரை சபைத் தீர்மானத்தை நிறைவேற்றாததால் கிராம மக்கள் பாதிப்படைவதாக மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் களைந்து வாழ்வில் சுடரேற்றும் அற்புத விரதம் கார்த்திகை சோமவார விரதமும், பிரதோச விரதமாகிய இன்று ஈழத்து சிதம்பரத்தானைப் பிரார்த்திப்போம் . "ஓம் நமசிவாய"

ஈழத்து சிதம்பர புராணம்

**"நீற்றொலி யெங்கனு நிறைந்து தோன்றலின்**
**ஏற்றுயர் கொடியினார்க் எடுத்த மந்திரம்**
**நாற்றிசை யடியவர் நாவிற் புல்லலின்**
**வீற்றுவார் சிவமணம் வீசிஅன்றே"**

சிவபெருமானை நினைந்து, தவவாழ்வு பெறும் முகமாக விரத மனுட்டித்து, பார்வதி சமேத எம்பெருமானாக சிவநாமங்களால் பாடியும், ஆடியும், நாடியும் அப்பெருமானை மகிழ்வித்து பாமலர்களோடு பூமலர்களால் அர்ச்சித்து, சகல சௌபாக்கியங்களையும் வரமாக நல்குமாறு கையாறதொழுதருவி கண்ணாரச்சொரிந்து இரந்து இருந்து கேட்கும் அற்புத விரதமே சோமவார விரதமாகும்.

பஞ்சமாபாதங்கள் அணுகாத வண்ணம், உள்ளும் புறமும் தூய உடம்பினராகவும் ஆசார சீலராகவும் மெய்யது வெண்பொடி நீறணிந்து "ஓம் நமசிவாய" எனவும் "சிவாயநம" என சிந்தையில் பஞ்சாட்சர நாமங்களை சதா உச்சரித்த வண்ணம், பூரணமாக அர்ச்சனைப் பொருட்களோடு பால், தயிர் ,நெய் முதலாம் சதுஸ்ர மூலகங்களோடும் சிவாலயம் (ஈழத்துச் சிதம்பரம்) சென்று வழிபடுதலானது சிவவரப்பேறளிக்கும். தில்லைக்கூத்தனிடம் சிவனிடம் "உம் கையில் எம்பிள்ளைகள் உமக்கே அடைக்கலம்" (எம் சமுதாயம் சந்ததி, நல்பழக்கம் சைவ நெறியில் வாழ வேணும் என) என்று பரிந்துநாடி, அடுத்த சந்ததி வாழ்வும் நம்முன்னோர் சிக்கெனப்பிடிக்கும் சிவ விரதமாகும். விரதம் நோற்பவர்களுக்கு சிவன் வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதும் தருவானாக காட்சியும், மாட்சியும், ஆட்சியும் சிவப் பரிசாக தருவான். " ஓம் நமசிவாய"

சந்திரன் தக்கனது சாபத்தால் 27 கலைகளில் 26 கலைகளையும் இழந்து ஒற்றைத் கலையோடு சிவனின் சோமவார விரதம் அனுஷ்டித்து விரதமகிமையால் மீண்டும் இழந்த கலைகள் அனைத்தையும் பூரணமாகவும் அழியாவரமும் சிவனின் திருமுடியிலே வளர் பிறையாக சூட்டப் பெற்றார்.

சீமந்தினி என்ற இராஜகுமாரி தனது கணவனான சந்திராங்கதன் என்பவன் யமுனை ஆற்றிலே உயிர் இழந்து அவள் விதவையான போது சிவ முனிவரின் கட்டளையின் பிரகாரம் சோமவார விரத்ததை ஓர் அணுவும், பிசகாத வண்ணம் நோன்பாக அனுஷ்டித்து, கணவனை உயிரோடு மீண்டும் பெற்று தீர்க்க சுமங்கலி ஆனாள். கார்த்திகை மாதம் திங்கள் தோறும் அருள் கொழிக்கும் இவ் விரதம் மேலும் மண- மன முறிவு வழக்குகள், குழந்தை இன்மை நோய், பிறவி நோய் யாவற்றி நின்றும் மீண்டு பேரின்ப பெருவாழ்வு எல்லா நலனும் தரவல்லது "ஓம் நமசிவாய"

30.11.2022 அன்று தினப்பத்திரிகையில் ஓர் சங்கு "வில்வ மரத்தை விரும்புகின்ற ஈழத்துச் சிதம்பரத்தான்" என ஊதியது. "முப்பத்து முக்கோடி தேவர்கள் சகிதம் சிவ தாண்டவம் ஆடியவாறு திருக்கையில் ஏந்திய அனல் பற்றி எரிகிறது.

உடுக்கும் கடும் ஒலி தருகிறது, ஆருத்திர தாண்டவம் நடக்கிறது. "நமசிவாய" பெருமானே! கோபம் தணிக என்று அட்டாங்கமாய் நிலத்திடை வீழ்ந்து வணங்கினோம், திண்ண புரத்தான் கங்கையில் நனைந்து வெப்பம் தணிந்து சிவபூமியாகிய ஈழத்தில் எனதும் எனது பரிவார ங்களும் வீற்றிருக்கும் கோயில்கள் மீது வழக்கு நடக்கிறது. நானா? நீயா? சன்னிதானத்தில் சண்டை போடுகிறார்கள்!

இன்றுசோமரவார விரதமும் பிரதோசமாகிய நன்நாளில் ஈழத்து சிதம்பரத்தானை பிரார்த்திப்போம்



"தீக்கடவுளின் தீமை தீர்ந்தது"
"சிவன் விரைத்து வந்து அருளுதல்"
*(திருமந்திரம்-361)*

**"அலர்ந்திருந் தானென்று அமரர் துதிப்பக்**
**குலந்தரும் கீழங்கி கோளுற நோக்கிச்**
**சிவந்த பரமிது சென்று கதவ**
**உவந்த பெருவழி யோடிவந் தானே.**


வானம், பூமி எங்கும் பரவி வியாபித்திருந்து சிவபெருமானை வானவர்கள் (நாமும்) வாழ்த்தி வணங்கி எதையும் தூய்மைப்படுத்தும் அக்கினி அழுக்குகளையெல்லாம் எரித்து தன் குற்றம் நீங்க பரம்பொருளாகிய சிவனது ஒளியானது. சகஸ்ரதளத்தில் போய்ப்பற்ற இதுவே வழிபடும் மகிழ்ச்சிக்குரிய பெருவழி "ஓம் நமசிவாய" என எண்ணச் சிவபெருமான் உள்ளன்போடு விரைந்து வந்து அருள் புரிந்தான் "ஓம் நமசிவாய" பத்திரிகையில் மேலும் சங்கு மாணிக்கவாசகர் மடாலயம் பூட்டிவைத்தார்கள் என ஊதியது. "ஓம் நமசிவாய"

அறநெறி ஒழுகுங்கள்
பசிக்குச் சோறு பரமன பூசை
*(திருமந்திரம் 196)*

**அவ்வியம்பேசி அறம்கெட நில்லன் மின்**
**வெவ்வியன் ஆகிப் பிறர் பொருள் வல்லல் மின்**
**செவ்வியன் ஆகிச் சிறந்து உண்ணும் போது ஒரு**
**தவ்விக் கொடு உண்மின் தலைப்பட்ட போதே.**

அடுத்தவர் மீது பொறாமை கொண்டு, அவதூறாகப் பேசி, அநியாயம் செய்யாதீர்கள், நீதிநூல் கூறிய நல்வழி கெட நடக்காதீர்கள், பெரும் கோபம் கொண்டு, பிறர் பொருளைக் கவர்ந்து, கைப்பற்றிக் கொள்ளாதீர்கள்.எல்லாச் சிறப்பும் பெருமையும் பெற்று நீங்கள் வாழ்வில் சிறந்திருக்கும் போதே நீங்கள் உண்ணும் போது, ஐயா, பசி! என்று யாரேனும் உங்களிடம் வந்தால் அப்போதே அவர்களுக்கு ஓர் அகப்பை உணவைக் கொடுத்துப் பின்பு உண்ணுங்கள். "ஓம் நமசிவாய" இன்று சோமவாரத்துடன், பிரதோசமான நந்தியின் விசேச பூசையும் அருள்மிகு பூசையில் கலந்து அதி உன்னதமான அருள் பெறுவோம். "ஓம் நமசிவாய"

**முத்தன் எங்கள்பிரான் என்றுவானோர்**
**தொழநின்ற திமில்ஏறு உடையானை**
**அத்தன் எந்தை பிரான் எம் பிரானை**
**ஈழத்துச் சிதம்பரனை மறக்கலும் ஆமே!**



**க.கு.க சிவபாலன் (K.K.K), போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-5416)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




மல்லாகம் காளி
கோவிலடியை சேர்ந்த
**நாகரத்தினம் மீனலோஜினி**
தம்பதியரின் புதல்வியும்
யா/வேம்படி மகளீர் கல்லூரி
மாணவியுமாகிய

செல்வி.

## நாகரத்தினம் சிந்தூரி

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 11 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்தியடைந்தமையையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம்.அவர் மென்மேலும் ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் அருள் நலத்துடன் சிறப்புக்கள் பெற்றுக் கல்வியில் முன்னேற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

(சி-5414)

மீனாட்சி அம்மன் கோவிலடி
சங்கத்தானை, சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
பெரிய மாமா குடும்பம்,
பெரியம்மா குடும்பம்,
சின்ன மாமா குடும்பம்.

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: சூரி 4 செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13184 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 92 ¼ சூரி 1 செவ் 12 இல்<br>உயரம்: 147 cm<br>தகைமை/ தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச.தனியார் தொழில்<br>தொ.இ: G/11379 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 63 சூரி 4 செவ் 7 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13185 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 36 ¾ சூரி , செவ் 11 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில் : பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச.தனியார் தொழில்<br>தொ.இ: G/11392 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 27 ¼ சூரி 2 செவ் 3 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்: A/L கடை<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13186 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 2<br>கி.பா: 11 ¼ சூரி 2 செவ் 11 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11408 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 7 ½ சூரி , செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13187 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்.1<br>கி.பா: சூரி 12 செவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் (கனடா)<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/11414 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 43







மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி! காவேரி!

கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல்வளையாமை
அறிந்தேன் வாழி! காவேரி!

பூவர் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி! காவேரி!

காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம், நின் கணவன்
நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன் வாழி! காவேரி!

இந்த அமுதத் தமிழ்ப் பாடல்களை எங்கேயோ கேட்டிருக்கிறோமல்லவா? ஆம், சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப்பாடல்கள் இவை. எனினும், இந்தப் பெண்கள் பாடும்போது முன் எப்போதுமில்லாத வனப்பும் கவர்ச்சியும் பெற்று விளங்குகின்றன.

இவர்கள் பொன்னி நதியின் அருமைத் தோழிகள் போலும்! அதனாலேதான் இவ்வளவு பரவசமாக உணர்ச்சி ததும்பப் பாடுகிறார்கள். அடடா! பாடலும் பண்ணும் பாவமும் எப்படிக் கலந்து இழைந்து குழைந்து இவர்களுடைய குரலிலிருந்து அமுத வெள்ளமாகப் பொழிகின்றன? பாட்டாவது, பண்ணாவது, கானமாவது, இசையாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. இது ஏதோ மாயக் கலை! பாடுகிறவர்கள், கேட்பவர்கள் எல்லாரையும் பித்துப் பிடிக்கச் செய்யும் மந்திர வித்தை!

படகு மிதந்து கொண்டே வந்து, மரங்கள் சிறிது இடைவெளி தந்த ஓடத்துறையில் ஒதுங்கி நிற்கிறது. இரண்டு பெண்கள் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருத்தி ஏழுலகத்துக்கும் ராணி எனத் தகும் கம்பீரத் தோற்றமுடைய பெண்மணி. இன்னொருத்தி வீணைத் தந்திகளில் விரல்களை ஓட்டி இன்னிசை எழுப்பிய நங்கை.

இருவரும் அழகிகள் என்றாலும் ஒருவருடைய அழகுக்கும் இன்னொருவருடைய அழகுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. ஒருத்தி செந்தாமரை மலரின் கம்பீர சௌந்தரியம் உடையவள். இன்னொருத்தி குமுத மலரின் இனிய அழகை உடையவள்.

ஒருத்தி பூரண சந்திரன் இன்னொருத்தி காலைப் பிறை. ஒருத்தி ஆடும் மயில் இன்னொருத்தி பாடும் குயில். ஒருத்தி இந்திராணி இன்னொருத்தி மன்மதனின் காதலி. ஒருத்தி வேகவாஹினியான கங்கா நதி. இன்னொருத்தி குழைந்து நெளிந்து செல்லும் காவேரி.

வாசகர்களை மேலும் சந்தேக ஆராய்ச்சி நிலையில் விட்டு வைக்காமல் இவர்கள் இருவரும் யார் என்று சொல்லி விடுகிறோம். கம்பீரத் தோற்றமுடைய கங்கைதான் சுந்தர சோழ மன்னரின் செல்வப் புதல்வி குந்தவை.

சரித்திரத்தில் ராஜராஜன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மனின் சகோதரி. அரசிளங்குமரி என்றும் இளைய பிராட்டி என்றும் மக்களால் போற்றப்பட்ட மாதரசி. சோழ ராஜ்யத்தின் மகோன்னதத்திற்கு அடிகோலிய தமிழ்ப் பெரும் செல்வி. ராஜராஜனுடைய் புதல்வன் ராஜேந்திரனை எடுத்து வளர்த்து வீராதி வீரனாயும் மன்னாதி மன்னனாயும் ஆக்கிய தீரப் பெண்மணி.

இன்னொருத்தி, குந்தவைப் பிராட்டியுடன் இருக்கும் பாக்கியத்தை நாடி வந்த கொடும்பாளூர்ச் சிற்றரசர் குலப்பெண். பிற்காலத்தில், சரித்திரத்திலேயே இணையில்லாத பாக்கியவதியாகப் போகிறவள். இன்று அடக்கமும் இனிமையும் சாந்தமும் உருவெடுத்து விளங்குகிறவள்.

இந்த இரு மங்கைமார்களும் படகிலிருந்து கரையில் இறங்கினார்கள். குந்தவை மற்ற தோழிப் பெண்களைப் பார்த்து, "நீங்கள் இங்கேயே இருங்கள். ஒரு நாழிகை நேரத்தில் திரும்பி வந்து விடுகிறோம்!" என்றாள்.

அந்தத் தோழிப் பெண்கள் அனைவரும் தெய்வத் தமிழ்நாட்டில் பற்பல சிற்றரசர்களின் அரண்மனையில் பிறந்த அரச குமாரிகள். குந்தவை தேவிக்குத் தோழியாக இருப்பதைப் பெறற்கரும் பேறாகக் கருதிப் பழையாறை அரண்மனைக்கு வந்தவர்கள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### நானே மணமகன்!

(நேற்றைய தொடர்ச்சி)

அவனுக்கு யார் கடன் கொடுப்பார்கள், இதனை அறிந்து கொண்டு அவனது நிலத்திற்கு அடுத்த நிலத்தை வைத்திருப்பவன் பெருமாளிடம் "நீ உன் நிலத்தில் பாதியை எனக்கு கொடுத்துவிடு. உனக்கு விவசாயம் செய்யப் பணம் கிடைக்கும். நீ நன்கு விவசாயம் செய்து இன்னும் வயல்களை வாங்கிப் போடலாம்" என்றான்.

பெருமாளுக்கு இந்த யோசனை மிகவும் பிடித்தது. அவன் தன் ஒரு ஏக்கர் நிலத்தில் அரை ஏக்கர் நிலத்தை அடுத்த வயல்காரனுக்கு விற்று அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு விவசாயத்திற்கு வேண்டிய உபகரணங்களையும், ஏர், எருதுகள் என்றெல்லாம் வாங்கிக் கொண்டு விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டான்.

அவன் நிலத்தில் நல்ல விளைச்சல் காணவே நிறையப் பணம் கிடைத்தது. அதனைக் கொண்டு மேலும் ஒரு வயலை வாங்கினான். இப்படியாக ஐந்து வருடங்களுள் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கி விட்டான். அவனது பொருளாதார நிலையும் மேம்பட்டது.

அவனது மகளும் விவாக வயதை அடையவே அவளுக்கு நல்ல இடத்துப் பையனைப் பார்த்துத் திருமணத்தையும் நிச்சயித்தான். அத்திருமணத்திற்கு கோதண்டத்தை அழைக்கக் கொடியூர் போனான். கோதண்டமும் அவனது முதலிரண்டு மகன்களும் சரியாக முகம் கொடுத்து பேசக்கூட இல்லை. ஆனால் கண்ணன் பெரு மாளைத் தனியே சந்தித்துத் தான் திருமணத்திற்கு வருவதாகக் கூறி அனுப்பினான்.

கண்ணன் பெருமாளின் மகளின் திருமணத்திற்குப் போவதை கோதண்டமும் அவனது இரு மகன்களும் கேலி செய்தனர். ஆனால் கண்ணன் அதைப் பொருட்படுத்தாமல் புலியூருக்குப் போய் பெருமாளின் வீட்டை வந் [illegible] பெருமாள் ஏனோ தவியாய் தவித்துக் கொண்டிருந்தான். திருமணத்தின் போது வரதட்சணைப் பணத்தைக் கொடுப்பதாகக் கூறி இருந்தான்.

ஆனால் அவனுக்கு அத்தொகையைக் கடனாகக் கொடுப்பதாகக் கூறி இருந்த வர் திடீரென மாரடைப்பால் முதல் நாள் இறந்து விட்டார். பெருமாளால் வேறு யாரிடமும் அவ்வளவு பெரிய தொகையைக் கடன் வாங்க முடியவில்லை.

மாப்பிள்ளையின் தந்தையோ பணம் வந்தால்தான் திருமணம் நடக்கம் என ஒரே பிடி வாதமாகக் கூறி விட்டான். கண்ணன் கூட பெருமாளின் நிலையைக் கூறினான். ஆனால் மாப்பிள்ளையின் தந்தையோ பணம் வரா விட்டால் திருமணம் இல்லை எனக்கூறி தன் மகனோடு கிளம்பத் தயாரானான். (தொடரும்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை நமக்கு எடுத்துக்காட்டும் கண்ணாடிகளே புத்தகம்.
– டேவர்ட் சிப்ரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் மாணவர்களின் சாதனையை புகழ்ந்து பாராட்டுவோம்

உன் திறமையை மற்றவர்கள் பாராட்டுவார்கள் எனக் காத்திராதே! நீயே உன் திறமையை உரக்கச் சொல் என்றார் ஜூலிய சீசர்.

சீசர் கூறிய கருத்து அற்புதமானது. அந்த வகையில் கல்வியில் வடமாகாணம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதென்ற கணிப்பீடுகள் அண்மைக்காலமாக எங்களை வாட்டி வதைத்திருந்தது.

எனினும் அத்தகையதொரு பின்னடைவு ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்பதை எவரும் வெளிப்படையாகக் கூறவில்லை.

இருந்தும் எங்கள் மாணவர்களின் கல்வித் தராதரத்தை உயர்த்துவதற்கு ஒட்டுமொத்தக் கல்விச்சமூகமும் புலம்பெயர் உறவுகளும் எடுத்த கடும் பிரயத்தனம் எங்கள் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளில் மிகப் பெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதிலும் குறிப்பாக 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் எமது மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் வெளியாகிய வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம் திறமையின் அடிப்படையில் எமது மாணவர்களுக்குக் கிடைத்த பல்கலைக்கழக அனுமதி மனநிறைவைத் தருகிறது.

திறமை அடிப்படையில் மருத்துவம் மற்றும் பொறியியலுக்கான அனுமதியை எமது மாணவர்கள் கணிசமான அளவு பெற்றுக் கொண்டதால், மேற்படி மருத்துவம் மற்றும் பொறியியலுக்கான அனுமதியில் எமது மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இதேவேளை இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் நமது மாணவர்கள் படைத்த சாதனைகள் உரக்கப் பேசப்பட வேண்டியவை.

ஆம், தேசிய ரீதியில் நடந்த அநேகமான போட்டிகளில் தனித்தும் குழுவாகவும் எமது மாணவர்கள் முதலிடத்தை பெற்றுச் சாதனை படைத்துள்ளனர் எனும்போது அது கண்டு நாம் பெருமை அடையாமல் இருக்க முடியாது.

இதை நாம் கூறும்போது, அண்மைக் காலப் பொருளாதார நெருக்கடியானது இந்த நாட்டுக்கு ஒரு பெரும் உபதேசத்தைப் போதித்துள்ளதென்பதையும் இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

அதாவது திறமைக்கு முன்னுரிமை கொடுக்காமல், ஆட்சி அதிகாரங்களை வைத்துக் கொண்டு இனத்துவத்திற்கு முன்னுரிமை கொடுத்ததன் காரணமாகவும் இந்த நாடு மிகப்பெரும் வீழ்ச்சி நிலைக்குச் செல்ல வேண்டியதாயிற்று என்ற உண்மை உரியவர்களால் உணரப்பட்டுள்ளது.

எனவே இன வேறுபாடின்றி திறமைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் எங்கள் நாட்டின் தரமும் தகைமையும் உயர்வடையும் என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதை தமிழ் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சுட்டி நிற்கின்றன.

ஆக, எமது மாணவர்களைக் குறைகூறுவதை மட்டுமே நாம் தொழிலாகக் கொள்ளாமல், அவர்களின் சாதனைகளையும் அந்தச் சாதனைக்குப் பின்புலமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தையும் பாராட்டிக் கௌரவப்படுத்துவோம்.

### போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்து
## நடுவீதியில் பிறந்தநாள் கொண்டாடிய 10 இளைஞர்கள் கோப்பாயில் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் கடமைக்கு இடையூறு விளைவித்த 10 இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. கோப்பாய் பகுதியில் வசிக்கும் குறித்த சட்ட மருத்துவ அதிகாரி தனது கடமையின் நிமிர்த்தம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் காரில் சென்று கொண்டிருந்த வேளை, கோப்பாய் நாவலர் பாடசாலை முன்பாக வீதியை மறித்து மோட்டார் சைக்கிளில் நின்ற இளைஞர்கள் குழுவொன்று கேக் வெட்டி பிறந்தநாள் தினத்தினை கொண்டாடிய வண்ணம் இருந்துள்ளனர். இளைஞர்கள் குழுவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தினால், அவ் வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டு இருந்தது.

அதனால் சட்ட மருத்துவ அதிகாரி தனது கடமைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டமையால், அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அங்கு கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 10 இளைஞர்களை கைது செய்ததுடன் அங்கு நின்ற இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-33.104)

## 20 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் 20 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் 40 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (நி-104)

## பாதீனிய ஒழிப்பு இயக்கம் செயற்றிட்ட அமைப்பு உருவாக்கம்

(அராலி)

சிற்குகள் அமைப்பு ஏற்பாடு செய்த அனைத்துலக மண்தினம் பற்றிய கலந்துரையாடலும் பாதீனியம் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் அங்குரார்ப் பணம் செய்யும் கலந்துரையாடலானது பலாலி வீதிகோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் நேற்றுக் காலை 9 மணி முதல் 12 மணி வரை இடம்பெற்றது.

இதில் முன்னாள் வடமாகாண விவசாயத்துறை அமைச்சரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான ஐங்கரநேசன், பல்வேறு சமூக சேவை அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அங்கத்தவர்கள் மற்றும் சூழல் நேயப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் தற்போது பெருகி வரும் பாதீனியத்தை முற்றாக அழிக்கும் முகமாக பொதுக் கட்டமைப்பின் தேவை கருதி "பாதீனிய ஒழிப்பு இயக்கம்" எனும் பெயரில் செயற்றிட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இக் கட்டமைப்பானது முதல் கொண்டு அனைத்து சமூக மட்ட அமைப்புக்களுடனும் இணைந்து பாதீனிய ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-104)

## மின்கட்டணத்தை மீண்டும் உயர்த்தினால் ஆடைத் தொழிற்சாலைகள் நலிவடையும்

(கொழும்பு)

மின்கட்டணத்தை மீண்டும் உயர்த்தினால் ஆடைத் தொழில் முற்றிலும் நலிவடையும் என வர்த்தக மண்டல ஊழியர்களின் தேசிய மையம் கூறுகிறது.

ஆடைத் துறையில் உள்ள பல பாரிய கைத் தொழில்களை நாட்டிலிருந்து வெளியேற்ற ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் அழைப்பாளர் காமினி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு ஏற்படும் நட்டத்தை குறைக்கும் வகையில் ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

இதற்கு அமைச்சர்கள் குழுவின் ஒப்புதல் ஏற்கனவே கிடைத்துள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆயிரம் சுற்றுலாப் பயணிகளுடன் கொழும்பை வந்தடைந்த அமெ.கப்பல்

(கொழும்பு)

அமெரிக்காவின் சொகுசுக் கப்பலான அசாமராக் வேஸ்ட் 600 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 400 பணியாளர்களுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடையவுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்திற்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ள மூன்றாவது சொகுசு சுற்றுலாப் பயணக்கப்பல் இதுவாகும். (நி)

## லக்சபான நீர் மின் நிலையத்தை கொரிய நிறுவனத்திற்கு வழங்க திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் தமிழர் தாயகத்தை இந்திய நிறுவனத்திற்கு தாரை வார்த்துள்ள நிலையில் இலங்கை மின்சார சபையின் கீழ் இயங்கும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவிற்கும் லக்சபான நீர் மின் நிலையத்தை கொரிய நிறுவனத்திற்கும் மாற்றுவதற்கான உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம், மின் உற்பத்தி நிலையங்களை கொள்வனவு செய்யவிருக்கும் வெளிநாட்டு நிறுவனம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தை அரசாங்கம் தனது அரச இலாபத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்குடன் முன்னெடுப்பதாக அரச ஆர்வலர்கள் தமது கருத்துக்கள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் [illegible] தொழிற்சாலை- கரந்தன், நீர்வேலி, கரந்தன், போயிட்டி, பொக்கணை, ஊரெழு அராலி வீதி- சங்கானை, துணைவி Maravanpulo wind Power Plant ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** தாழ்வுப்பாடு ஆகிய இ[illegible]களிலும் மின்சாரம் [illegible] தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாத்துறை மூலம் குவியும் டொலர்கள்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை ஈட்டிய வருமானம் 107.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையான காலப் பகுதியில் சுற்றுலாத்துறையின் மொத்த வருவாய் 1,129.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (நி)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் 3 ஆவது நாளாக முன்னெடுப்பு



(தருமபுரம்)

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான,அலுவலகத்தினர் நேற்று மூன்றாவது நாளாக கிளிநொச்சியில் விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்று80 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் குறித்த விசாரணை இடம்பெற்று வருகிறது. 2000 ஆம் ஆண்டுக்கு பின்பு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியங்களையும் அழைத்து வந்து தமது விசாரணைகளை முன்வைக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய சாட்சியங்களோடு வருகை தந்து தமது கருத்துக்களை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பதிவு செய்தனர். (நி-316)

வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் புளூஸ் அறக்கட்டளை அமைப்பின் ஊடாக சுமார் 600 தென்னாங்கன்றுகள் மற்றும் மா மரங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.





வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 70 ஆவது ஆண்டுவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சங்கத் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

கலை கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்ததுடன் தமிழ் மணி அகளங்கனும் கலந்து சிறப்பித்ததார்.

(படம்:-சதீஸ்)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022

16 Days of Activism against Gender Based Violence

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அன்றாடம் நிகழும் கசப்பான நிதர்சனம், தாமதமாகிவிடும் முன் இப்போதும், எப்போதும், என்றென்றும் செயற்படுவோம்!!!"

(C-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)


# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 06 . 1950



மறைவு 04 . 12 . 2022

## சுப்பன் சண்முகநாதன்

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் சண்முகநாதன் அவர்கள் நேற்று (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பன் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வெள்ளையப்பா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவ்ரும் குகதாசன் (பாலு), சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதீஸ்வரி(ரதி), டிசான் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற யோகநாதனின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற தேவராசா, கமலாதேவி, ரஞ்சினிதேவி, பொன்ராசா, பூவிலிங்கம், கினியன், சந்திராதேவி, கினியம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அனுசன், தனுஷ், துஷா, சயந்தன், டிவின்சி, டிலு, டெனிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் மணிவண்ணன் (பிரான்ஸ்), யசோதினி, சசிவண்ணன் (பிரான்ஸ்), பிறேமினி(பிரான்ஸ்), கஜேந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05.12.2022 திங்கட்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 12.00 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 659 4320

077 994 6539

(13682)

தகவல்
குடும்பத்தினர்

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 20/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு 20.12.2022 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01.பதவி | - | பொது முகாமையாளர் |
| சம்பள குறியீட்டு இல | - | 101/07 |
| சம்பள அளவுத்திட்டம் | - | 21,125-275 X 10-300X10-26.875 |
| (கூ.ஊ.ஆ.சு.நி 01/2018) | | 253.500-3.300X10-3.600X10-32.500 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமமான தகைமை. இத்தன்மையானது கணக்கியல்/வியாபாரப்புள்ளி விபரவியல்/ வியாபாரகற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர்தர பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில்முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

| | | |
|---|---|---|
| 02.பதவி | - | கிளை முகாமையாளர் |
| சம்பள குறியீட்டு இல | - | 208/13 |
| சம்பள அளவுத்திட்டம் | - | 18.360-160X 10-170X 10-21.660 |
| (கூ.ஊ.ஆ.சு.நி 01/2018) | | 220.320-1.920X10-2.040X10-259.920 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தராதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பொது நியந்தனைகள்**

1. வயது 20.12.2022 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2.கல்வித் தகைமைகள், அனுபவம், வயது வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

3. நியமனத்தின் போது சுற்று நிருபத்திற்கமைவாக ரொக்க பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

4.ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

5. சங்க பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்**

(C-5415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலில்...

பொலிஸார் இணைந்து நடத்திய தேடுதலின்போது குறித்த சந்தேகநபர் வாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-7,104)

## ரயிலுடன் மோதி...

பகுதியில் அமைந்துள்ள புகையிரத கடவையைக் கடக்க முற்பட்ட நிலையில் மன்னாரிலிருந்து மதவாச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த புகையிரதத்துடன் மோதுண்டு படுகாயமடைந்திருந்தார்.

காயங்களுக்குள்ளான குறித்த நபர் உடனடியாக அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7,299)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1414
வெற்றி இலக்கங்கள்
துலாம் 6 9 2 7 7 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.04
சீட்டிழுப்பு இலக்கம் - 989
U 18 22 37 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 3201
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
K 14 22 56 65
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1307
A 05 38 48 67 73

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 268
மீனம் 22 30 44 62 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 4959
V 2 2 3 2 4 6
தேசிய லொத்தர் சபை

## நாட்டு மக்களுக்...

பில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

கிராமங்களில் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் மக்களுக்கு உண்மையைக் கூறுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார். (4-7)

## சிவில் பாதுகாப்பு...

தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

அண்மைய நாட்களாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பல்வேறு பகுதிகளில் வனவிலங்குகளை வேட்டையாடுபவர்கள் மற்றும் அதற்கு பயன்படுத்தும் ஆயுதங்கள் வைத்திருப்பவர்களை கைது செய்து வந்துள்ளனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் மாலை மாங்குளம் துணுக்காய் வீதியில் மாங்குளம் நகருக்கு அண்மையில் வீதியில் சென்ற இளைஞரை மறித்த சிவில் உடையில் இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இளைஞரை சோதனை செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது நீங்கள் யார்? என்று வினவி அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியபோது அடையாள அட்டை காண்பிக்கவில்லை என பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து அந்த இடத்திற்கு வந்த இளைஞரின் சகோதரன் அதிகாரிகளிடம் அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு முரண்பட்ட வேளை சிவில் உடையில் இருந்த ஒருவர் சிவில் பாதுகாப்பு திணைக்கள அடையாள அட்டையை காண்பித்துள்ளார். இதன்போது சிவில் உடையில் வீதியால் செல்பவர்களை மறித்து சோதனையிட உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது என்ற வாக்குவாதம் இடம்பெற்று அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது சிவில் உடையில் இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தன்மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து பாதிக்கப்பட்ட இளைஞர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போது சம்பவ இடத்திற்கு மாங்குளம் பொலிஸார் அழைக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது அதிகாரிகள் தங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸாருக்கு தெரிவித்த நிலையில் காயமடைந்த இளைஞரின் சகோதரனை பொலிஸ் நிலையம் அழைத்து சென்ற பொலிஸார் அதிகாரிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்து இளைஞனைக் கைது செய்துள்ளனர். பொலிஸாரின் முறைப்பாட்டின் பின்னர் குறித்த இரண்டு அதிகாரிகள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்வதற்கான பத்திரங்களை பெற்று வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்

இந்நிலையில் குறித்த செயற்பாடு மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-7,316)

## பாடசாலைகள்...

வகுப்புகளில் அதிகளவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழகங்களின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களிடையே ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகளவில் காணப்படுவதாக புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

## நாட்டை மீட்கும்...

களை வழங்கக்கூடிய ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவெல தேர்தல் தொகுதி கூட்டத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கான சிறந்த அணி ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளதாகவும் சரியான சிந்தனை, சரியான வேலைத்திட்டம் மற்றும் நிலையான தத்துவம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து பலத்தையும்பயன்படுத்தி இந்த நாட்டைக் கட்டியெழுப்பத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## மீனவ...

குரல் கொடுக்க வேண்டியது எமது கடமை.

இந்த அட்டைப் பண்ணையால் பலர் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை யாரும் கண்டுகொள்வதாக இல்லை. இதனை நாம் தெரிவு செய்து அனுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கதைப்பதற்கு தயாராக இல்லை. உங்களை நம்பித்தானே நாம் உங்களுக்கு வாக்குகளை வழங்கினோம். ஆனால் நீங்கள் கடற்றொழிலாளர்களை ஒதுக்குகின்றீர்கள் என மேலும் தெரிவித்தார். (4-7)

## கல்வி...

துள்ளது.

இதற்கு மத்தியில் க.பொ.த. உயர் தர பரீட்சை நடைபெறவுள்ளதுடன், இதற்காக ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இடைநிலை வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1934 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.04 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,900,920/-
W 26 40 72 76
8383 535

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.04
சீட்டிழுப்பு இல : 4095
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,935,940/-
வெற்றி இலக்கங்கள் 02 06 50 68 T

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 257
சீட்டிழுப்பு திகதி 2022.12.04 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 14 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,959,300/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,180,784.20
திகதி 2022-12-04
வெற்றி வாரம் 3646
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 33 40 54 59 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,222,420/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 37 28 34 47 64
சீட்டிழுப்பு வாரம் 1110
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.12.04 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 282,905,225.80
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1760
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,170,060/-
வெற்றி இலக்கங்கள் 37 38 45 67 U
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

நாகபூசணி அருளுடன்
வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி அதிர்ஷ்டம்
03.11.2022 அன்று **சனிக்கிழமை அதிர்ஷ்டம்** லொத்தர் சீட்டில் ரூபாய் **பத்து லட்சம்** வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள் அபிவிருத்தி லொத்தர் சபை **யாழ்.முகவர் கனகலிங்கம் திலகவதி.**
யாழ்.நகரில் தொடர்ந்து லொத்தர் சீட்டுக்கள் வெல்லப்பட்டு வருகின்றமை நீங்கள் அறிந்ததே. தவிர **விசேட ரிக்கற் 'தனநிதானய'** விற்பனையாகி வருகின்றது.
**அதிகம் வாங்குங்கள்; அதிகம் வெல்லுங்கள்**
யாழ்.முகவர்
கனகலிங்கம் திலகவதி
இல.04.கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்.
(13678)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13630)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (13671)

தொடர்பு: றாஜ் - 077 679 6623

**மில் விற்பனைக்குண்டு**

மிருசுவில் சந்திக்கு
அருகாமையில் மர அரிவு மில்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (C-5420)

077 255 7761

**வணிகக் கல்வி**

**DCM** - யாழ் நகர் (வேம்படி உயர்தர பாடசாலை அருகாமை)

இறுதிக் கருத்தரங்கு

06.12.2022
திங்கள் 2.30 – 5.30 மணிவரை

- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
- 30 மணித்தியாலங்கள் (30+)
- வெளி மாணவர்களும் பங்குபெற்ற முடியும்
- கையேடுகள் வழங்கப்படும்

(C-5418)

N.S.KAPIL BBM (Hons), spl.in M.mar
077 778 9815
077 278 8489

**வீட்டுடன் காணி உடன் தேவை**

யாழ்.நாவலர் வீதியை அண்மித்த பகுதிகளில் தூய உறுதியுடன் நல்ல வீடு (2-3 பரப்பு காணியுடன்) உடன் தேவை. வீட்டு உரிமையாளரோ அல்லது தத்துவகாரரோ உடன் தொடர்பு கொள்ளவும். (13679)

077 603 3259

**நடிகர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
விளம்பரக் குறும்படத்தயாரிப்பு
நிறுவனம் ஒன்றிற்கு 60
வயதிற்கு மேற்பட்ட நடிகர்கள் ,
நடிகைகள் தேவை.
பொருத்தமானவர்கள்
விண்ணப்பிக்கலாம்

தொலைபேசி இல :
076 396 1925
021 226 4778

மின்னஞ்சல் :
aheanam.productions@gmail.com

முகவரி :
போக்காலை வீதி,
உடுப்பிட்டி,
வல்வட்டித்துறை (13677)

## அரச காணிகள்...

“2048 இளைஞர் குழு” என்ற குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2023 வரவு - செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

எதிர்வரும் 25 ஆண்டுகளுக்குள் இதனை விட சிறந்ததும், பலம்மிக்கதுமான பொருளாதாரத்தை உருவாக்குவதையே நான் எதிர்பார்க்கின்றேன்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்திலிருந்து இது ஆரம்பிக்கப்படவுள்ளது. கடந்த ஆகஸ்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2023 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை திடீரென உருவான ஒன்றல்ல. கடந்த இரு வருடங்களுக்கு முன்னரே இவ்வாறானதொரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்பது தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு காரணியாகும்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பில் வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்ற போதிலும், பொருளாதாரம் இவ்வாறு முழுமையாக வீழ்ச்சியடையும் என்று எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. மத்திய வங்கியினால் கூட இது தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை.

நாட்டிலுள்ள ஒவ்வொரு நிறுவனங்களும் தத் தமது விருப்பத்திற்கு ஏற்ப காணிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் யாருக்கு காணிகள் வழங்கப்படுகின்றன என்பது எமக்கு தெரியாது. இதனால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புக்களை முதலில் தடுக்க வேண்டும்.

அரசாங்கத்திற்கு அதற்கு சொந்தமான காணியின் அளவினை துல்லியமாகக் கூற முடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது. அதேபோன்று அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளில் எவ்வாறான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதும் தெரியாது. எந்தவொரு அரச அதிகாரிக்கும் இதனைக் கூற முடியாது. பிரதேச செயலகங்களின் விருப்பத்திற்கு ஏற்ப காணிகளை வழங்க முடியாது.

தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக்குழுவின் ஆலோசனைக்கு அமையவே காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். இதுவும் தற்காலிக நடவடிக்கையே ஆகும். எனவே நாம் இது தொடர்பில் புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். புதிய சட்டத்தின் ஊடாக இதற்கான திணைக்களமொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (4-7)

**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127.

**சைவமன்றத்தில் வேலை வாய்ப்பு
மடப்பள்ளி ஐயர் / உதவி அர்ச்சகர்
(நைவேத்தியம், பிரசாதம் செய்தல்
மற்றும் கோயிற்பணி புரிதல்)**

சைவமன்றத்தினால் நிர்வகிக்கப்படும் சிட்னிமுருகன் கோயிலில் பிரதானமாக மடப்பள்ளி ஐயராகவும் ஏனைய நேரத்தில் உதவி அர்ச்சகராகவும் பணி செய்வதற்கு ஓர் ஐயரை நியமிப்பதற்கு மன்றம் தீர்மானித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுபவர் சுவாமிக்குரிய நைவேத்தியமும் அடியார்கள் பூசையில் படைப்பதற்கு கேட்கும் பிரசாதங்களையும் செய்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட நேரங்களில் கோயிலில் உதவி அர்ச்சகராகவும் பணியாற்ற வேண்டும். தொடக்கத்தில் இரு வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்படும்.

**தகுதி**
- ஏற்கெனவே பிரசாதங்கள் (பொங்கல், புளிச்சாதம், வடை, மோதகம் முதலியன) கோயிலில் செய்த அனுபவம்.
- உதவி அர்ச்சகராக பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றிருத்தல்.
- உதவி அர்ச்சகராக பணியாற்றிய அனுபவம்.
- லட்டு போன்ற இனிப்புகள் செய்த அனுபவம் விரும்பத்தக்கது
- பூமாலை கட்டுவதற்கு தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது

விண்ணப்ப நிறைவு நாள்: 30.12.2022

விண்ணப்பம் அனுப்புவதற்குரிய விபரம்:
த. ஞானரட்ணம், சைவமன்ற செயலாளர்
ஈமெயில்: Secretary@sydneymurugan.org.au
மேலதிக விபரங்களுக்கு: ச. சபானந்தன் + 61 405 147 679 (13676)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில்
160 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
077 814 7389, 077 986 5457 (13680)

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
**றோயல் நெய்**

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த
அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.



Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.